**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாடநெறி கட்டண வருமானத்தில் ரூபா 1,909,146 ஆண்டின் வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படாமல் அபிவிருத்தி நிதியத்தில் | பதிலளிக்கப்படவில்லை. | ஆண்டிற்குரிய சகல வருமானங்களும் நிதிச்செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |

செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை மற்றும் அபிவிருத்தி நிதியம் அப் பெறுமானத்தால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மாணவர் வருமானம் ரூபா 3,905,827 ஆக இருந்ததுடன் அதில் 04 வருடங்களுக்கு மேற்பட்ட 29 மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,924,500 மீதியாகக் காணப்பட்டது. | இந்தப் பெறுமதியில் அதிக அளவு உரிய பாடநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக இருந்தமையால் அந்த வருமானத்தை அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் இலக்கம் 38 என்ற நிதிச் சட்டத்தின் 11(அ), 9(2)(ஊ) மற்றும் 10(5)(1) ஆம் பிரிவுகள் | உரிய அமைச்சரினதும் விடயப் பொறுப்பு அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 8,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் ஊழியர் சம்பளத்தில் 60 சதவீத அளவு மாத்திரம் தற்போது திறைசேரியிலிருந்து கிடைப்பதுடன் சம்பளத்திற்காக மிகுதித் தொகை மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களை தீர்ப்பதற்காக நிறுவனத்தின் வருமானம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு கிடைக்கின்ற வட்டியினை கொண்டு பயன்படுத்தப்படுகின்றது. | நிதிச் சட்டத்தின் பிரகாரம் முறையான பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்று முதலீடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக | கிரயம் ரூபா 8,432,225 ஆன நூலக புத்தக | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | இருப்பு 2020 ஆம் ஆண்டு முதல் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட தொற்று நோய் நிலைமையினால் இந்த இரண்டு வருடங்களிலும் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. 2022 ஆம் ஆண்டுக்குரிய இருப்பு மெய்மையாய்வு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக் கான தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய இலக்கம் 10/2017 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | கல்வி சார் பதவியணியினரில் நான்கு பேர்களில் வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 23,611,956 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | கல்வி சார் மற்றும் கல்வி சாரா பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்கை தொடர்பாக பொது முறைமை ஒன்றை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன் அதுவரை வருகைப் பதிவேடு ஒன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,547,396 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,229,596 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,776,992 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 18,080,000 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்து செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான ஆசிரியர்களால் பெறப்பட வேண்டியிருந்த தொழில்சார் தகைமைகள், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் உள்ளடக்குவதற்காக 2009 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கல்வி அமைச்சு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காமையின் காரணமாக அந்த பாடநெறிக்காக ஆசிரியர்கள் விண்ணப்பத்திருக்கவில்லை. அதன் காரணமாக உரிய பாடநெறி 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலத்தில் கைவிடப்பட்டிருந்ததுடன் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்குப் புறம்பாக நூலகத் தகவல் கற்கை பாடநெறி மற்றும் குறுங்கால பாட நெறிகளை அமுல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் (COPE) போதும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதும் உரிய பிரச்சனைகளை விரைவாகத் தீர்க்குமாறு கல்வி அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை நியாயமான நடைமுறை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நூலக ஆலோசனைக் குழுவினால் புதிய நூலக தகவல் முகாமைத்துவ முறைமை (KOHA) ஸ்தாபிக்க வேண்டி இருந்தமை 2019 மே 21 ஆம் திகதி நடைபெற்ற நூலக ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது இனங்காணப்பட்டிருந்த போதும் 2024 மே 15 ஆம் திகதி வரையிலும் முறைமையில் தரவுகளை உள்ளடக்குவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட விசேட நிலைமையின் காரணமாக அதனை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததாகவும் மற்றும் அதன் நடவடிக்கைகளை 2022 மே ஆரம்பித்து மேலும் தரவுகளைச் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நூலக தகவல் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |